SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust
and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade

ENATHUR, KANCHIPURAM - 631 561.
Phone : 044-27264066
Mail : admin@sankaracollege.edu.in
Website : www.sankaracollege.edu.in

15/04/2021

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** Board Room

**Date:** APRIL 15 $^{th}$, 2021

**Agenda:** Approval of Value added courses and Suggestions. And panel of names to the academic council for appointment of examiners

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Chairman
2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
3. Dr. G. ANITHA, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
4. Dr. T.S. JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
5. Dr. S. SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
6. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் *(11.07.2019, 26.12.2019)* பரிந்துரைகளின் படி பின்வரும் நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

*1.* கொரானா சூழல் காரணமாக தடைபெற்ற சுற்றுசூழல் குறித்த பன்னாட்டு ஆய்வு மாநாடு நல்ல சூழல் மீண்டும் திரும்பியப்பின்னர் நடத்த ஆவண செய்யப்பெறும்.

*2.* தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் இணைந்து கணித்தமிழ்ப் பேரவை அமைத்து அதன் மூலம் மாணவர்களுக்குக் கணினியில் தமிழ் மொழியின் செல்வாக்கு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போட்டிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்த நிதி பெறப்பட்டு ***03.03.2020*** முதல் ***12.03.2020*** வரை பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. இவற்றை தர்மபுரி, அரசு கலைக்கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **பா. குப்புசாமி**, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இணையவழிக் கல்வி/மொழித் தொழிநுட்ப நிரலாளர் முனைவர் **அகிலன் இராசரெத்தினம்** சென்னை, குருநானக் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் **மு. தியாகராஜ்** முதலானோர் கணினி மற்றும் செல்பேசியில் தமிழ் உள்ளீடு, தமிழ்ப் பயன்பாட்டு மென்பொருள்கள், மின்னூலாக்கமும் தரவுதளங்களும், தமிழில் சமூக ஊடகங்கள் ஆகிய பொருண்மைகளில் பயிற்சி அளித்தனர். ***16.03.2020*** பயிலரங்கமும் தொடக்க விழாவும் நடைபெற திட்டமிட்டிருந்த சூழலில் கொரானாவால் நிகழ்ச்சி கைவிடப்பெற்றது. எனினும் அப்பயிலரங்கத்திற்குத் தேர்வு செய்யப்பெற்ற வல்லுநர்கள் சென்னை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர், முனைவர் **இரா. பன்னிருகைவடிவேலன்,** சென்னை, நோக்கர் மொழி ஆய்வகம் நிறுவனர் மற்றும் வல்லமை மின்னிதழ் ஆசிரியர் முனைவர் **அண்ணா கண்ணன்** முதலானவர்கள் கொண்டு இணையவழியாக *02.04.2020* முதல் *10.04.2020* வரை இணையத்தில் நேரநிர்வாகம், மின்னூல் ஆக்கம், தமிழில் இணையப் பயன்பாடுகள் ஆகிய பொருண்மைகளில் கணித்தமிழ்ப் பேரவைக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. மேலும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பெறுகின்றன.

3. முதுகலை மாணவர்களின் ஆய்வுப் பார்வையை மேம்படுத்தும் நோக்கில் ஆய்வு நூலகங்களான **டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், கீழ்த்திசை சுவடிகள் நூலகம், மறைமலையடிகள் நூலகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், ஆவணக்காப்பகம், கன்னிமரா நூலகம்** முதலான நூலகங்களுக்கு மாணவர்களே நேரடியாகச் சென்று தகவல் சேகரித்து படக்காட்சிகளுடன் விளக்குவதான தொடர் ஆய்வரங்கம் ***26.02.2020*** முதல் ***11.03.2020*** வரை நடத்தப்பெற்றன..

4. கொரானா தொற்றுக் காரணமாக இணையவழி வகுப்புகள் நடைபெற்ற காலத்தில் இணையவழியாக ***shodhganga*** இணைய தளத்தில் கிடைத்த தமிழகப் பல்கலைக்கழகங்களில் செய்யப்பெற்ற பெண்ணியம் தொடர்பான முனைவர்பட்ட ஆய்வேடுகள் பன்னிரண்டு மாதிரிக்காக எடுத்துக்கொள்ளப்பெற்று முதுகலை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்று வழங்கப்பெற்று அதனை மதிப்பிடும் வகையில் **தொடர் ஆய்வரங்கம் *10.10.2020* முதல் *17.10.2020* வரை** இணையவழியாக நடத்தப்பெற்றன. இதில் தில்லிப் பல்கலைக்கழக நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியத்துறை பேராசிரியர் முனைவர் **தி. உமாதேவி,** காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் **வீ. நிர்மலாராணி,** இலங்கை தேசிய கல்வி நிறுவக சிரேஸ்ட விரிவுரையாளர் **ராணி சீதரன்,** புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மைய மேனாள் பேராசிரியர் முனைவர் **க. பஞ்சாங்கம்,** சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி மேனாள் பேராசிரியர் முனைவர் **இரா. பிரேமா,** மும்பை வாழ் தமிழ் எழுத்தாளர் **புதிய மாதவி** ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அரிய கருத்துரைகள் வழங்கி ஊக்கப்படுத்தினர்.

5. **'ஆய்வு நெறிமுறைகளும் ஆய்வேடு எழுதுதலும்'** என்ற முதுகலைத் தாளுக்காக காஞ்சிபுரத்தை ஒட்டிய புலவர்கள், படைப்பாளர்களான புலவர் **பு.மா. ஜெயசெந்தில்நாதன், புரிசை நடராசன், முத்து. ராமமூர்த்தி,** முனைவர் **மு. ஞானத்தாய், ஏ.கே. செல்லதுரை, மீனா சுந்தர், பாலச்சந்திரன், அமுதகீதன், காஞ்சியண்ணல், காஞ்சி சாந்தன், புல்வெளி காமராசன், தனியவன்** ஆகியோர் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியே தலைப்பாக வழங்கப்பெற்று அவர்கள் தொடர்பாக நேரடியான கள ஆய்வு செய்து ஆய்வுக்கட்டுரை வழங்க பணி வழங்கப்பெற்றது. அதன்படியே மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ***02.03.2021*** **முதல்** ***06.03.2021*** **வரை தொடர் ஆய்வரங்கம்** நடத்தப்பெற்றது.

6. **'தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்'** என்ற பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கம் கொரானா தொற்று காரணமான முழுஅடைப்பு சூழலிலும் இணையவழியாக அறிவிப்புகள் கொடுக்கப்பெற்று, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் *69* ஆவது பீடாதிபதியான **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் *86* வது ஜெயந்தி நாளான *05.08.2020*** அன்று இணையவழியாக நடத்தப்பெற்றது. நாடு தழுவிய நிலையில் புலவர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் கலந்துகொண்டு தமிழகத்தை ஒட்டிய திருத்தலங்கள் அவற்றின் தலபுராணங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர். அவற்றில் *125* கட்டுரைகள் மட்டும் **'தலபுராணங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்'** என்ற தலைப்பில் இரு தொகுதிகளாக *(ISBN: 978-81-939345-8-6, 978-81-939345-7-9)* அன்று பிற்பகலில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் *70* ஆவது பீடாதிபதியான **ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின்** திருமுன்னிலையில் தமிழ்நாடு அரசு, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு. **க. பாண்டியராஜன்**, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் **கோ. விசயராகவன்**, தமிநாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. **க. பணீந்திர ரெட்டி** முதலானோர் இணையவழியாக கலந்துகொண்ட நிகழ்ச்சியில் வெளியிடப்பெற்றது.

7. தமிழோடு தொடர்புடைய இசை, நாடகம், நாட்டுப்புறக் கலைகள், சைவசித்தாந்தம் குறித்த பயிலரங்குகள் மற்றும் மதிப்புக்கூட்டு பாடங்கள் உரிய வல்லுநர்களைக் கொண்டு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றுவருகிறது. அதன் ஒரு பகுதியாக தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல்துறைப் பேராசிரியர் முனைவர் **கோ.ப. நல்லசிவம்**, திருவாடுதுறை ஆதின இசைப்பயிற்றுநர் ஓதுவாமூர்த்திகள் திருமதி **ரேவதி கிருஷ்ணமூர்த்தி** ஆகியோரைக் கொண்டு **'தமிழ்ப் பண்ணிசை'** என்ற சான்றிதழ்ப் படிப்பு ***21.01.2021*** முதல் தொடங்கப்பெற்று, வகுப்புகள் நேரடியாகவும் இணையவழியாகவும் நடத்தப்பெறுகின்றன. இதில் முதுகலை தமிழ் மாணவர்கள் மட்டுமன்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் மாணவர்கள் பயில்கின்றனர் என்பதும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறுகின்றனர் என்பதும் பாடத்திட்டக் குழு உறுப்பினர்களால் பாராட்டப்பெற்றது. அதன் பாடத்திட்டமும் பாடத்திட்டக்குழு முன்பு சமர்ப்பிக்கப்பெற்று, ஏற்று, பாராட்டப் பெற்றது.

8. செயல்வழி அகமதிப்பீட்டுத்தேர்வுகள் கொரானா அச்ச சூழலிலும் மொழிப்பாடத்தில் நேர்காணல் முதலான நிலைகளிலும் இணையத்தில்

தேடி திரட்டுதல் முதலான நிலைகளிலும் வானொலி வழி பாடங்கள் வழி ஒலி ஒப்படைப்புகள் வழியாகவும் அகமதிப்பெண்கள் வழங்கப்பெற்றன. நேரடி வகுப்புகள் தொடங்கப்பெற்ற சூழலில் **தொல்லியலும் கல்வெட்டியலும்** என்ற இளங்கலை மூன்றாம் ஆண்டு பாடத்திற்காக *10.03.2021* அன்று சென்னை அருங்காட்சியகத்திற்கு களப்பயணம் மேற்கொள்ளப்பெற்று, அதன்வழி பெறப்பட்ட ஒப்படைப்புகள் அகமதிப்பீட்டுக்குப் பயன்கொள்ளப்பெற்றன.

இவையாவும் பாடத்திட்டக் குழுவினரால் பாராட்டப்பெற்று பின்வரும் பரிந்துரைகளும் ஆலோசனைகளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.

- முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு நான்காம் பருவத்தில் வைக்கப்பெற்றுள்ள **'ஆய்வு நெறிமுறைகளும் ஆய்வேடு எழுதுதலும்'** என்ற எழுத்துத்தேர்வு அடிப்படையிலான முதன்மைத்தாளாக உள்ள தாளை அடுத்த கல்வியாண்டு முதல் **'ஆய்வுக் கட்டுரை எழுதுதல்'** என்ற செய்முறைதாளாக மாற்ற பரிந்துரைக்கப்பெற்றது.

- இளங்கலை, இளம் அறிவியல் பாடங்களுக்கு ஈராண்டு மொழிப்பாடமாகவும், இளம் வணிகவியல், வணிக மேலாண்மையியல், பயன்பாட்டு கணினியியல் போன்ற பாடப்பிரிவுகளுக்கு ஓராண்டு மொழிப்பாடமாகவும் இருக்கும் சூழலில் இரண்டிற்கும் ஒரே பாடத்திட்டம் வகுக்கும் போது தமிழிலக்கியம் மற்றும் மொழிப் பயிற்சிகளில் இன்றியமையாத பல பகுதிகளை ஓராண்டு மொழிப்பாட மாணவர்கள் இழந்துவிடுகின்றனர். எனவே, ஆங்கிலப் பாடத்திட்டத்தைப் போல தமிழிலும் ஓராண்டு மொழிப்பாடத்திற்கும், ஈராண்டு மொழிப்பாடத்திற்கும் முழுமையான நிலையில் வேறு வேறு பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பெற்றது.

- *2018-19* இல் நடைமுறைக்கு வந்த மொழிப்பாடத்தில் அலுவல் கடிதங்கள், விண்ணப்பங்கள் குறித்த மொழிப்பயிற்சி விடுபட்டுள்ளமை பாட ஆசிரியர்களால் கவனப்படுத்தப் பெற்றுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு முதலாம் ஆண்டு முதல் பருவ பாடத்திட்டத்திலேயே அலகு - 6 மொழிப்பயிற்சி பகுதியில் அலுவல் கடிதங்கள், விண்ணப்பங்கள் என்ற தலைப்பு உடனடியாக இணைத்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பெற்றது.

- *2018-19* இல் நடைமுறைக்கு வந்த மொழிப்பாடத்தில் நான்காம் பருவப் பாடத்திட்டத்தில் சங்க இலக்கியம் மற்றும் அற இலக்கிய பாடப்பகுதிகள் மிகவும் குறைவாக இருப்பது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பின்னூட்டம் வழியாகக் கவனப்படுத்தப்பெற்றது. அதனையும் சமகால போட்டித்தேர்வு பாடத்திட்டங்களையும் நன்னெறி சார்ந்த பண்பாட்டு விழுமியங்களை மொழிப்பாடம் வழியாக வழங்குதல் நோக்கங்களையும் கருத்தில் கொண்டு புதிதாக சில பாடப்பகுதிகளை உரிய பாடத்திட்டத்தில் இணைத்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பெற்றது.

- *2018-19* இல் நடைமுறைக்கு வந்த இளங்கலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் மூன்றாம் ஆண்டு ஆறாம் பருவத்தில் 'சங்க இலக்கியம்' என்ற முதன்மைத்தாள் பாடப்பகுதிகள் மிகுதியாக இருப்பது பாட ஆசிரியர் மற்றும் மாணவர்களின் பின்னூட்டங்களால் கவனப்படுத்தப்பெற்றது. அதனைச் சரிசெய்யும் வகையில் அப்பாடத்திட்டத்தில் வரும் அலகு – *5* இல் உள்ள பரிபாடல், ஐந்தாம் பருவ பாடமான பக்தி இலக்கியத்திலும் வருவது நோக்கி நீக்கப்பெற்று, மற்ற அலகில் உள்ள பாடங்கள் ஐந்து அலகிற்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க பாடத்திட்டக்குழு ஆலோசனையின் பேரில் தீர்மானிக்கப்பெற்றது. இவ்வாறே இளங்கலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தில் மூன்றாம் ஆண்டு ஆறாம் பருவத்தில் உள்ள 'தொல்லியலும் கல்வெட்டியலும்' என்ற பாடத்திட்ட அலகுகளும் அப்பாடத்துறையில் ஏற்பட்டுள்ள சமகால வளர்ச்சி, கண்டுபிடிப்புகள், மாற்றங்களை உள்வாங்கியும் போட்டித்தேர்வு பாடத்திட்டங்களை உள்வாங்கியும் அலகுகள் அளவில் சில மாற்றங்கள் பாடத்திட்டக்குழுவால் பரிந்துரைக்கப்பெற்று உடனடியாக மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

- முதுகலைப் பாடத்திட்டத்திலும் இக்கால இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், சங்க இலக்கியம், காப்பியங்கள், மொழிபெயர்ப்பியல் பாடங்களில் அலகு அளவில் சில மாற்றங்களைக் கொண்டுவர பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பின்னூட்டங்கள் வழியாக ஆலோசிக்கப்பெற்று பரிந்துரைக்கப்பெற்றது.

- அண்மையில் சென்னைப்பல்கலைக் கழகத்தில் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதனையும் தற்கால போட்டித் தேர்வுகள் பாடத்திட்டங்களையும் சமகால தேவை மற்றும் பிராந்திய

அறிவு வளம் மற்றும் கல்வி நிறுவனக் கொள்கைகளுக்கு இனங்க மொழிப்பாடம், இளங்கலைப் பாடப்பிரிவுகளுக்கு புதியப் பாடத்திட்டத்தை வரும் கல்வியாண்டில் உருவாக்குவது என ஆலோசித்து தீர்மானிக்கப்பெற்றது.

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN 15/04/2021

2. Dr. G. JAYASHREE G. Jay 15/4/21

3. Dr.G. ANITHA 15/4/21

4. Dr. T.S. JEYALAKSHMI 15/4/21

5. Dr. S. SIVAGAMASUNDARI S. Sivakami 15/4/2021

6. Prof. Dr. K.R. VENKATESAN 15/4/21